கோவை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை - திருமதி.மா. சாந்தி., B.Sc., M.A., B.L., M.A., M.B.A., M.L.M.,

சுருக்கம்

பணிக்குழு - தொழிலாளர் துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - செல்வி.ரா.சகிலா, இளநிலை உதவியாளர், தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகம், ஈரோடு - இளநிலை உதவியாளர் பதவியில் 20.09.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு தகுதி காண் பருவத்தில் வைத்து - உத்தரவிடப்படுகிறது.

---

ந.க.எண்.அ/4876/2023.-1

நாள் 05.12.2023

படிக்கப்பட்டது

1. அரசாணை எண்.10, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்-14.12.1995.
2. அரசாணை எண்.190, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்-20.09.2007.
3. தமிழ்நாடு, அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் எண்.1955/PSD-2 /2023, நாள்-23.08.2023.
4. சென்னை, முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.ஜி3/21971/2023-1, நாள் 13.09.2023.
5. ஈரோடு, தொழிலாளர் இணை ஆணையர் கடிதம் எண். அ1/4810/2023-2 நாள் 30.11.2023.

---

ஆணை-

மேலே 3 -ல் படிக்கப்பட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி செல்வி.ரா.சகிலா, என்பவர் இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு மேலே 4 -ல் படிக்கப்பட்ட முதன்மைச் செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் செயல்முறை ஆணைகளின்படி ஈரோடு, தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 20.09.2023 அன்று முற்பகல் பணியமர்த்தப்பட்டு தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். தனியர் தற்போது வரை ஊதியமில்லா, அசாதாரண விடுப்பு ஏதும் துய்க்கவில்லை என தெரிவித்து தனியருக்கு 20.09.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணைகள் வழங்கலாம் என மேலே 5 -ல் படிக்கப்பட்ட ஈரோடு, தொழிலாளர் இணை ஆணையர் கடிதத்தில் பரிந்துரை செய்துள்ளார்.

தனியரது பணிப்பதிவேடு பரிசீலனை செய்யப்பட்டதில் நாளது தேதி வரை முறையற்ற விடுப்பு ஏதும் துய்க்கவில்லை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என அறியவருகிறது.

மேலும் மேலே 3 -ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின்படி தெரிவரது பணிவரன்முறையானது சென்னை, உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வுகள் -IV-ல் அடங்கிய தெரிவுகளுக்கெதிராக நிலுவையில் உள்ள ரிட்மனுக்களின் இறுதித் தீர்ப்பிற்குட்பட்டது.

The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examinations – IV Group IV.

Scanned with CamScanner

மேலே 5 -ல் படிக்கப்பட்ட ஈரோடு, தொழிலாளர் இணை ஆணையரது பரிந்துரைப்படி இவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 20.09.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்படுகிறது. மேலும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் விதி 23(அ) (i) மற்றும் தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் பொது விதி 32 -ன் கீழ் பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதி காண் பருவத்தில் வைக்கப்படுவதுடன் பணிவரன்முறை செய்த நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு பணிக்காலத்தில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக முடிக்க வேண்டுமென இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

மேலும் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து ஈராண்டு காலத்திற்குள் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 34-ன்படி மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்விலும், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டுமெனவும் மேற்கண்டவாறு பணிவரன்முறை செய்யப்பட்டதன் விவரம் தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் உத்தரவிடப்படுகிறது.

05/12/23

4/6 கூடுதல் தொழிலாளர் ஆணையர்
கோவை.

<u>பெறுநர்</u>
செல்வி.ரா.சகிலா, இளநிலை உதவியாளர்,
தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகம், ஈரோடு (உரியவழியாக).

நகல்
தொழிலாளர் இணை ஆணையர், ஈரோடு (பணிப்பதிவேடு (1) கட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிப்பதிவேடு பெறப்பட்டமைக்கான ஒப்புதலை உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு ஈரோடு, தொழிலாளர் இணை ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)

2. பணிப்பதிவேடு/முக்கிய ஆணைத் தொகுப்பு.

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது-
முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர், சென்னை-06.

Scanned with CamScanner